தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 16, திருவள்ளுவர் ஆண்டு - 2045

2014 ஆகஸ்ட் 1, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ஒழுக்கம் எல்லாருக்கும் உயர்வைத் தரும். அதனால் அந்த ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிக் காக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உறுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 300, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

300—

துணை மின் நிலையம்

***29579—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூரில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதியிலுள்ள கோட்டூருக்கு, திருத்துறைப்பூண்டி 110/33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அங்கு, 33/11 கே.வி., 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றியுடன்கூடிய துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக 1.2 ஏக்கர் தனியார் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், நிருவாக அனுமதி பெறப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு, அடுத்த நிதியாண்டில் முடிவடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூரைச் சுற்றியுள்ள கீழப்பனையூர், இராயநல்லூர், விளக்குடி, ஆலிவலம், ஆண்டாங்கரை, கிராலத்தூர், விக்கிரபாண்டியம், இருள்நீக்கி, புழுதுக்குடி, சேந்தமங்கலம், பள்ளிவர்த்தி, மழவராயநல்லூர், கோட்டூர்தோட்டம், நெம்மேலி, ஆதிச்சபுரம், கருப்புகிளார் மற்றும் மன்னார்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த வடகோவனூர், திருராமேஸ்வரம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மின் அழுத்தக் குறைவினால் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதி விவசாயத்தையே நம்பி இருக்கக்கூடிய பகுதியாக இருப்பதால், பருத்தி, நெல், கரும்பு சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, கோட்டூரில் 110 கே.வி. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டதற்கு, பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டே அதை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மின் பளுவைக் கருத்திற்கொண்டுதான் கோட்டூரிலே 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கிடைப்பதில்தான் பிரச்சினை. அதற்குத் தேவையான 1.2 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நிலத்தை கையகப்படுத்தி உடனடியாக துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் பழுதடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றிட வேண்டும். அதேபோன்று, காற்று வேகமாக வீசுகிறபோது, பழைய மின் கம்பிகள் அறுந்து விழுந்து உயிரிழப்பு ஏற்படக்கூடிய சூழலும் இருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் பழுதடைந்திருக்கக்கூடிய மின் கம்பங்களையும், மின் கம்பிகளையும் மாற்றுவதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான பணிகளை மேற்கொள்வதற்கு

வேண்டிய அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குருந்தன்கோடு வட்டத்திலே, மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. அந்தப் பகுதி மக்களுக்கு சரியான மின்சாரம் விநியோகம் செய்வதற்கு வசதியாக 110 கேவி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியில் மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், துணை மின் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஒரு பகுதியில் துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்றால், உடனடியாக, ஒரேயொரு உத்தரவின் மூலமாக அதை அமைத்துவிட முடியாது. அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன; ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அந்தப் பகுதியிலே தற்போது இருக்கின்ற மின் பளுவைக் கணக்கிடவேண்டும். வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில்கொண்டு, அங்கே ஆண்டுக்கு எத்தனை சதவிகிதம் மின் பளு அதிகரிக்கின்றது என்பதையும் கணக்கிடவேண்டும். ஆகவே, அப்படிக் கணக்கிட்டு, தேவை ஏற்படின், அதுபோன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் செய்து வருகிறது. அந்த அடிப்படையிலே, நிதிநிலைக்கேற்ப அங்கே புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகளைப்பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, மறவமங்கலத்தில் ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதற்கான பணி தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நிலம் கையகப்படுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டே அந்தப் பணி நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும், அரசனூரில் ஏற்கெனவே 110 கே.வி. துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அதை விரிவாக்கம் செய்வதற்கான திட்டமும் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதையும் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மறவமங்கலத்தில் பெருகி வரும் மின் தேவையைக் கணக்கில்கொண்டு, ஏற்கெனவே அங்கே 110/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பொறுத்தவரையில், அங்கே நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் ஏறத்தாழ முடிவுற்று, ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளை விரைவுபடுத்தி, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு விரைவில் அந்தப் பணிகள் முடிக்கப்படும். இன்னும் 6 மாத காலத்திற்குள்ளாகவே அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுவிடும் என்று நான் கருதுகிறேன். அந்தப் பகுதியிலே ஏறத்தாழ 15 கோடி ரூபாய் செலவிலே அமையவிருக்கின்ற அந்தத் துணை மின் நிலையத்திற்கான பணிகளை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையேற்று இன்னும் எவ்வளவு விரைவாக அதை முடிக்க முடியுமோ, அந்த அளவிற்கு விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தமிழகத்தின் முதல்வரம்மா எங்களம்மா பாரு;
கலை அன்பிலேதான் நேரு; அவர் திறமையைத்தான் பாரு;
ஏழை மக்கள் வாழ்ந்திடவே வாரித் தந்தார் பாரு;
ஏழை மக்கள் குடியிருக்கும் பசுமை வீடு பாரு;
அவை அன்பு மலர்க் காடு; இதை உரைக்கும் தமிழ் ஏடு;
கொடை வள்ளலென்றும், பாரி என்றும் புகழும் இந்த நாடு!"
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள, பெரியநாயக்கன்பாளையத்திற்குட்பட்ட சின்னத்தடாகம் பகுதியிலே, ஒரு துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவுண்டம்பாளையம் பகுதியிலே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்குப் பக்கத்திலே உள்ள காரமடையிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு, அந்தப் பகுதியினுடைய மின் பளு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் பகுதியிலே மின்சாரப் பற்றாக்குறை வராத அளவிற்கு, ஏற்கெனவே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைத்ததன்மூலம், மின்சாரப் பிரச்சினை ஓரளவு இல்லை என்ற சூழ்நிலை தற்போது உருவாகியிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாட்டுப்பாடி கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவருடைய கோரிக்கையை ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, அதனடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு*

அதற்கான பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 301, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

301—

புதிய கட்டடம்

***43916—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் மாளிகைக்குப் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

முற்பகல் 10–10

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், எங்களுடைய குடும்ப குல தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கும்பிட்ட கரங்கள் விலகும் முன்பே வரம் வழங்கும் அன்னையாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். என்னுடைய தொகுதி மக்களுடைய நீண்ட நாள்